## -வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் -2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத்த தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் II ஆம் பிரிவின்படி வருடாந்த நிதிக் கூற்றுக்கள் அடுத்துவரும் ஆண்டு ஏப்ரல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 21 ஆந்திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

வீதிப்பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வீதித்துறை உதவிச் செயற்திட்டத்திலிருந்து ரூபா 1,186,594 பெறுமதியான அலுவலக உபகரணம் பெறப்பட்டிருந்த போதிலும் உரிமையாண்மை மாற்றப்பட்டிருக்காததுடன் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது சர்வதேச அபிவிருத்தி சங்க நிதியளிப்பின் கீழ் இனங்காணப்பட்ட பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து நிதிகள் பெறுவதற்கு ஒரு வர்த்தக வங்கியில் குறித்த ரூபா கணக்கை திறக்க வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய கொள்கைகளின் படி மேற்குறிப்பிட்ட வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட விசேட (டொலர்) கணக்கு தொடர்பில் இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்குகளில் ரூபா 3,909,883 தொகையான மொத்தச் செலவினம் காட்டப்பட்டிருந்த அதேநேரம் சமர்ப்பிக்கப்பட்ட திறைசேரி கணனி அச்சுத் தாளில் நோராத்த தொகை ரூபா 2,179,326 ஆக இருந்தமையால் ரூபா 1,730,557 ஆன வித்தியாசத்தைக் காட்டுகின்றது.

### 1.2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கமை

சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) (i) 2006 திசெம்பர் 22 ஆந்திகதிய பீஈ/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டின் செப்தெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் தேசிய பாதீடுட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்கான வருடாந்தப் பாதீடு தயாரிக்கப்பட்டு வேண்டப்பட்டவாறு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 4.3 | வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் திரட்டு நிதிய மாற்றங்கள் கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | குறித்த காலத்திற்குள் நிதியம் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்தம், காலாண்டு மற்றும் வருடாந்தம் எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகளைச் சுட்டிக்காட்டி |

| | |
|---|---|
| | முழுக்காலத்தையும் உள்ளடக்கும் விரிவான ஒட்டுமொத்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய திட்மொன்று தயாரித்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழுவானது ஆகக் குறைந்தது 3 மாதங்களிற்கு ஒரு தடவை ஒழுங்கான அடிப்படையில் கூட்டப்பட வேண்டிய போதிலும் இது வேண்டப்பட்டவாறு கூட்டப்பட்டிருக்கவில்லை. |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு நியமங்கள்/ கைநூலைப் பயன்படுத்தி மாதிரி அடிப்படையில் வீதிப்பராமரிப்பு மீதான தொழில்நுட்ப கணக்காய்வை நடாத்துவதில் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய செயலகம் தொடர்ச்சியாக ஈடுபட்டு பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளுக்கு இணங்க உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொழில்நுட்ப கணக்காய்வாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வேதனங்களாக ரூபா 496,152 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப கணக்காய்வின் செலாற்றல் அறிக்கைகள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 19 ஆம் பிரிவின்படி, நிலையான வீதிப் பராமரிப்பு நிதிகளை வழங்குவதில் நம்பிக்கைப் பொறுப்பின் வினைத்திறனை மதிப்பிடுவதற்கும் நம்பிக்கைப் பொறுப்பின் செயல் முன்னேற்ற வழிகளைப் பரீட்சிப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளை நிதியம் தொடங்கியதிலிருந்து 3 ஆண்டுகளின் பின்னர் மீளாய்வு செய்ய வேண்டும். 2006 சனவரி 1 இலிருந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மீளாய்வு செய்திருக்கவில்லை.

(iii) 2005 ஒத்தோபர் 25 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞானத்தின் 4 ஆம் பந்தியின்படி, பெற்றோல் மற்றும் டீசல் விற்பனைகளிலிருந்து அரசாங்கம்

பெறுகின்ற வருமானத்திலிருந்து ஒரு லீற்றர் பெற்றோலுக்கு ரூபா 1 மற்றும் ஒரு லீற்றர் டீசலிற்கு ரூபா 0.50 ஒதுக்கி வைக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி எரிபொருள் செஸ் நிதியம் தாபிக்கப்பட்டிருந்தனவா என்பதற்கு கணக்காய்விற்கு சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.

(iv) தேசிய வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,332 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இதில், தென் மாகாண சபை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 111 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. இத்தொகை தேசிய வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் தென் மாகாணத்தில் பிரதேச சபைக்கு உடமையாகவிருந்த கிராமிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(v) ஆலோசனை சேவையால் வழங்கப்பட்ட வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய கொள்கைகளின்படி, செயலகம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக மாத்திரம் ஆலோசனை பெறமுடியும். வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் முதலாவது காலாண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஊடாக ரூபா 1,332 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட கொள்கை வேண்டுகையை மீறி துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நேரடியாக ரூபா 4,629 மில்லியன் விடுவித்திருந்தது.

(vi) மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளில் மொத்த ஒதுக்கீடு ரூபா 5,500 மில்லியனாக இருந்த போதிலும், மீளாயவாண்டிற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஊடாக ரூபா 1,332 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 4 ஆம் பிரிவின்படி வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தாபிப்பின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. எனினும், வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய கொள்கைகளின்படி நிதியம் செயற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் கீழ் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய செயலகத்தின் தாபிப்பிப்புக்கு தொழில்நுட்ப உதவியின் ஆலோசனை சேவைக்காக ரூபா 74,717,634 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுடைய சிபார்சுகள் மற்றும் கொள்கைகள் முழுமையாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 340,985,888 தேறிய மிகையை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான தேறிய மிகை ரூபா 3,481,215 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 337,504,673 தொகையான முன்னேற்றம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மீளாய்வாண்டிற்கான பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் தேறிய மிகையை பின்வரும் பொழிப்பு காட்டுகிறது.

| | 2012<br>ரூபா மில் | ரூபா மில் |
|---|---|---|
| திறைசேரியிடமிருந்தான பெறுவனவுகள் | 1,332 | |
| சர்வதேச அபிவிருத்தி சங்கத்திலிருந்து பெறுவனவுகள் | 339.8 | |
| மொத்த பெறுவனவுகள் | | 1,671.8 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | 1,332 | |
| வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பராமரிப்புச் செலவினம் | 4 | |
| மொத்த கொடுப்பனவுகள் | | (1,336) |
| | | 335.8 |
| கூட்டு: திறைசேரி உண்டியல் மீதான வட்டி | 5 | |
| நாணயமாற்று இலாபம் | 0.2 | 5.2 |
| தேறிய மிகைகள் | | 341 |

**2.3 வாகனங்களின் பாவனை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஒக்தோபர் 8 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அற்வுறுத்தல்களுடன் இணங்காமல் ரூபா 2,273,540 வருடாந்த கொடுப்பனவுக்காக தனியார் துறையிலிருந்து வாடகை அடிப்படையில் 3 வாகனங்களை வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பெற்றிருந்தது.

(ஆ) வாகனங்களின் பயன்பாட்டிற்காக குறித்த உத்தியோகத்தர் பொறுப்பாக இல்லாதிருந்ததுடன் பயன்படுத்திய வாகனங்களின் விபரங்களின் கிடைக்காமை காரணமாக வாகனங்களின் செயலாற்றல் திருப்திகரமான மட்டத்தில் உள்ளனவா என்று கணக்காய்வில் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

## 3. கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்திட்டம்

நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கைகள் வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்காக 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்படி செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானித்த குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வாகனங்களின் பாவனை

(ஆ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள்

(இ) உள்ளகக் கட்டுப்பாடு